


மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் – ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ. தலைமையில்

# திருச்செங்கோட்டில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாமில் பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் மரு.மா.மதிவேந்தன் வழங்கினார்!

நாமக்கல், அக். 8-

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு கே.எஸ். ரங்கசாமி தொழில்நுட்ப கல்லூரியில், மத்திய மாநில அரசு துறைகள், கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு (07.10.2023) நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச. உமா, திருச்செங்கோடு ஜல்லிக்கட்டு பேரவை தலைவர் மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன் தலைமையில் வழங்கினார்கள்.

இம் முகாமில் 121 நிறுவனங்கள் மூலம் 213 நபர்களுக்கு பணி ஆணைகளை, வனத்துறை அமைச்சர் மா. மதிவேந்தன் வழங்கினார்.

முன்னதாக, இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு முழுவதும் இருந்து 120 தனியார் துறை வேலை வழங்கும் நிறுவனங்கள் கலந்துகொண்டு தங்களுக்கு தேவையான ஆட்களை தேர்வு செய்தனர். வேலைவாய்ப்பு முகாமில் 121 நிறுவனங்களை கொண்டு நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 1800க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டு, பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிய 213 நபர்கள் தேர்வாகியுள்ளனர்.

நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் பேசும் போது தெரிவித்ததாவது:

தமிழ்நாடு பல பொருளாதார குறியீடுகளில் அகில இந்திய அளவில் முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்நிலையை தக்க வைத்துக் கொள்ளவும், பெரும் அளவிலான முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுடன், மாநிலத்தில் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திடவும் தமிழ்நாடு அரசின் தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

### உலக முதலீட்டார்கள் மாநாடு!

தமிழ்நாட்டில் தொழில் தொடங்க பாதுகாப்பாக சூழலை ஏற்படுத்தியதன் விளைவாக மாநிலங்களின் தரவரிசை பட்டியலில் வெகுவாக முன்னேறி வருகிறது.

2030ம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி அடைந்திட தமிழ்நாடு முதலமைச்சர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

தமிழ்நாட்டில் இதிக அளவில் முதலீடுகள் ஈட்டிடும் வகையிலும், இளைஞர்களின் வேலைவாயப்பினை உறுதி செய்திடும் வகையிலும் வருகின்ற 2024 ஜனவரி மாதம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு மிக சிறப்பாக நடைபெறவள்ளது.

தொழில் துறையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக தமிழ்நாடு தொழில் வழிகாட்டி முகமைக்கு விருது கிடைக்க பெற்றுள்ளது. மேலும் இளைஞர்களின் திறன்களை மேம்படுத்திட பயிற்சி அளிக்க நான் முதல்வன் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறுகுறு தொழில் தொடங்கிட மானியம் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வழங்கி ஊக்குவித்து வருகின்றார். இவ்வறாக தமிழ்நாடு அரசின் பல்வேறு வாய்ப்புகளை இளைஞர்கள் பயன்படுத்தி கொண்டு தங்களது வாழ்வதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இளைஞர் எந்த துறையை தேர்வு செய்தாலும் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றி அத்துறையில் வெற்றி பெற தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்.

தமிழ்நாடு இளைஞர்களின் வேலைவாய்ப்பினை உறுதி செய்திடும் வகையில் தனியார் வேலை வாய்ப்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், இளைஞர்கள் இது போன்று நடைபெறும் வேலைவாய்ப்பு முகாமினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்தார்.

தொடர்ந்து, மகளிர் திட்டம் சார்பில் 37 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.3.62 கோடி மதிப்பிலான வங்கி கடனுதவிகளை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சுஜாதா தங்கவேல், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) பிரியா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மா. ஷீலா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



கடலியல் வரலாற்று ஆய்வாளர் மறைந்த ஒரிசா பாலு அவர்களின் உடலுக்கு குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அருகில் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் உள்ளார்.

